IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.167/2023

Deposition of Witness for P.W.9

| | | |
|---|---|---|
| NAME | - | திருமதி. விஜயலட்சுமி |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | அறிவியல் அலுவலர் தடய அறிவியல் துறை சென்னை |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.11.2025.

எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது அறிவியல் அலுவலர் தடய அறிவியல் துறை சென்னையில் பணிபுரிகிறேன். கடந்த 06.06.2019 அன்று உயிரியல் பிரிவு வேலூர் தடய அறிவியல் துறை ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட சத்துவாச்சாரி காவல் நிலைய குற்ற எண்.191/2019 வழக்கு சம்பந்தமான வழக்கு சொத்தில் இரத்தம் கண்டறியப்பட்ட பகுதி ஆய்வுக்காக பெறப்பட்டது. இனம் 1 ) சிமெண்ட் மோர்டார் மிக்ஸ் இனம் 3) காஸ் துணி 4) ஜீன்ஸ் பேண்ட் 5) சட்டை 6)ஜட்டி 7)சட்டை 8) அரை கால் பேண்ட் 9) அருவாள் 10) அருவாள் 11) இரும்பு பைப் 12) ஸ்டீல் பைப் இவைகள் பகுதியாக ஆய்வுக்காக பெறப்பட்டது. இவை அனைத்தும் ஆய்வு செய்ததில் மேற்படி பொருட்களில் உள்ள இரத்தம் மனித ரத்தம் என கண்டறியப்பட்டது. மேலும் இனம் 3, 4, 5, 6, 7 மற்றும் 8 மற்றும் 10, 11 உள்ள பொருட்களில் இரத்தம் O பிரிவு வகையை சார்ந்தது என கண்டறியப்பட்டது. ஆனால் இனம் 1, 9, 12 இல் உள்ள இரத்தம் எந்த பிரிவு சார்ந்தது என கண்டறிய இயலவில்லை. இந்த ஆய்விற்கு SER/VLR/74/2019 தேதி 15.10.2019 அறிக்கை வேலூர் நீதித்துறை நடுவர் எண்.5 கு

அனுப்பப்பட்டது. குறுதி வடிநீர் ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகும். கடந்த 06.06.2019 அன்று உயிரியல் பிரிவு வட்டார தடய ஆய்வகம் வேலூரிலிருந்து பிரேத பரிசோதனை எண்.420/2019 தேதி 21.04.2019 செல்வராஜ் என்பவரின் மாதிரி இரத்தம் ஆய்விற்காகப் பெறப்பட்டது அதை ஆய்வு செய்ததில் அது O பிரிவை சார்ந்தது என கண்டறியப்பட்டது. இந்த ஆய்வறிக்கை SER/VLR/67/2019 தேதி 15.10.2019 என்று குறிப்பிடப்பட்டு வேலூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு மற்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. மாதிரி இரத்த வகை (Control Blood) அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை-</u>

இரத்த வகைகளில் இரத்தப் பிரிவு O Positive O Negative என குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. மேலும் இரத்த மாதிரியை ஒரே ஒருவரின் உடலில் இருந்து பெறப்பட்டது என்பதற்கு DNA பரிசோதனை செய்யவில்லை என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 17.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.17 10:08:43 +0530

Additional District Judge(FTC),
Vellore